දුරකථන
தொலைபேசி
Telephone
) 0112669192 , 0112675011
) 0112698507 , 0112694033
) 0112675449 , 0112675280

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
) 0112693866
) 0112693869
) 0112692913

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல் முகவரி
e-mail
)postmaster@health.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
website
) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය
எனது இல
My No.
) **CF/EXQ/05/2020**

ඔබේ අංකය
உமது இல
Your No. :

දිනය
திகதி
Date
) 2021/04/09

பொது சுற்றறிக்கை கடித இலக்கம் :- 02 - 30 /2021

மாகாண சுகாதார செயலாளர்கள் (வடமத்திய, வடக்கு, சப்ரகமுவ, மேல், தென், கிழக்கு மற்றும் மத்திய மாகாணம்)
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை.
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், (வடமத்திய, வடக்கு, சப்ரகமுவ, தென், மேல், கிழக்கு மற்றும் மத்திய மாகாணம்)
மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் (வடமத்திய, வடக்கு, சப்ரகமுவ, மேல், தென், கிழக்கு மற்றும் மத்திய மாகாணம்)
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்,
சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள்,

**சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 02 – 2006) (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான யிற்குரிய பதவியினருக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (2வது தடவை)**

சுகாதார அமைச்சில் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த சேவைப்பிரிவு PL - 02 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2021.06.06** ம் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்** :-

சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் பிரிவின் (PL - 02 - 2006 (ஏ) யிற்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் (வர்ணம் பூசுபவர், போர்க்லிப்ட் இயக்குனர், ஜெனரேட்டர் இயக்குனர் (முன்னைய பதவிப் பெயர் இயந்திர இயக்குனர்), கொதிகலன் இயக்குனர், சப்பாத்து தயாரிப்பாளர், எலும்பு முறிவுத் தொழிநுட்ப உதவியாளர் (முன்னைய பதவிப் பெயர் செயற்கை அவயவம் தயாரிப்பாளர் மற்றும் சத்திரசிகிச்சை உபகரண தயாரிப்பாளர்), விலங்கு மேற்பார்வையாளர், சத்திரசிகிச்சை உபகரணம் தயாரிப்பாளர், இருட்டறை உதவியாளர், பூச்சியியல் பரிசாரகர் (வெளிக்கள), நீர்க்குழாய் தொழிநுட்பவியலாளர் / நீர்ப்பம்பி இயக்குனர், சுற்றுலா விடுதிக் காப்பாளர், சிகை அலங்காரம் செய்பவர், தச்சு வேலை செய்பவர், தோல் வேலை செய்பவர், காச்சியடித்து ஒட்டுபவர், ஒட்டுவேலை செய்பவர், உலோக வேலை செய்பவர், கோசெட்டியர், கடைச்சல் வேலை செய்பவர், மேசன், கொல்லன், சமையலாளர், தையல் உதவியாளர் (முன்னைய பதவி தையல்காரன், தையல்காரி) ஓவியர், ஆய்வுகூட உதவியாளர் (முன்னைய பதவி ஆய்வுகூட வேலையாளர்), பரிசாரகர் (ஆண்/பெண்), தொலைபேசி இயக்குனர், வைத்தியசாலை ஓவசியர்) தரம் II ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள / பதவி உயர்வு செய்யப்பட்டுள்ள மற்றும் இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கவனிக்கவும் : **2021.05.05ம்** திகதி தரம் **II** இற்கு பதவியுர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள உரிய நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை மாத்திரம் சிபாரிசு செய்து அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

03. **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படும் உத்தியோகத்தர்கள்.**

(i) 2012.08.14 ம் திகதியில் உள்ளவாறு பின்வரும் பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 13 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அப்பதவிக்கு உரிய II ஆம் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து (IIவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில்) விடுவிக்கப்படுவர். (1999.08.14 திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பதவிக்கு நியமனம் பெற்று II ஆம் தரத்திற்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு தகுதியுள்ளவர்கள் ஆவர்)

(i) சத்திர சிகிச்சைக்கூட உபகரண தயாரிப்பாளர்.
(ii) தோல் வேலை செய்பவர்.
(iii) தையல்காரன்/தையல்காரி
(iv) வர்ணம் பூசுபவர்
(v) காய்ச்சியடித்து ஒட்டுபவர்
(vi) கொல்லன்
(vii) சிகை அலங்ககாரம் செய்பவர்
(viii) போர்க்லிப்ட் இயந்திர இயக்குனர்
(ix) சுகாதார ஆய்வுகூட உதவியாளர்
(x) ஒட்டுவேலை செய்பவர்
(xi) செயற்கை அவயவம் தயாரிப்பாளர்
(xii) இயந்திர இயக்குனர்.

(ii) 2006.01.01ம் திகதிக்கு பின்னர் பின்வரும் பதவி ஒன்றில் நியமனம் பெற்று 2012.08.14 ஆம் திகதியில் உரிய பதவியில் குறைந்த பட்சம் 03 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் II ஆம் தரத்திற்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அப் பதவிக்கான II ஆம் தரத்திற்கு உரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து (II வது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில்) விடுவிக்கப்படுவர்.

(i) சப்பாத்து தயாரிப்பாளர்.
(ii) விலங்கு நிலைய மேற்பார்வையாள்
(iii) இருட்டறை உதவியாளர்
(iv) நீர்க்குழாய் தொழிநுட்பவியலாளர்
(v) தச்சுத் தொழிநுட்பவியலாளர்
(vi) கோசேட்டியர்
(vii) மேசன்
(viii) சுற்றுலா விடுதி பொறுப்பாளர்
(ix) சமையலாளர்
(x) ஓவியர்
(xi) தகர வேலை செயபவர்
(xii) உலோகவேலை செய்பவர்
(xiii) வைத்தியசாலை ஓவசியர்
(xiv) தொலைபேசி இயக்குனர்
(xv) பரிசாரகர்
(xvi) பூச்சியியல் பரிசாரகர். (வெளிக்கள)

04 **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியை **2021.05.05**ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்க்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடை கடித உறைகள் இரண்டினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ப்பங்கள், சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது **A4** தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்

05. பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினையும் திகதியையும் இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

06. பரீட்சையின் பொருட்டு அனுமதி வழங்கல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடைய ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

07. பரீட்சை நடைமுறை

- **இப் பரீட்சையானது "தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம்", "விடய அறிவு" என்னும் இரண்டு வினாத்தாள்களை கொண்டுள்ளது.**
- **தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் வினாத்தாளானது பல்தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களை கொண்டிருக்கும். நேரம் 02 மணித்தியாலங்கள், புள்ளிகள் - 100, சித்தியடைவதன் பொருட்டு 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.**
- **விடய அறிவு தொடர்பான வினாத்தாளானது பல்தேர்வு மற்றும் அமைப்புக்கட்டுரை வினாக்களை கட்டமைக்கப்பட்ட வினாக்களை கொண்டிருக்கும். நேரம் 01 மணித்தியாலம். புள்ளிகள் - 100. சித்தியடைவதன் பொருட்டு 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.**

08. பரீட்சை பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|
| தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் தொடர்பான பின்வரும் விடயங்கள்<br>• தாபன விதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்<br>நியமனங்களை முடிவுறுத்தல் - (V)<br>விடுமுறை நாள் தொடர்பான கொடுப்பனவு மற்றும் படிக்கொடுப்பனவுகள் - (VIII)<br>பிரயாணக் கொடுப்பனவு - (XIV)<br>சம்பளக்கடன் மற்றும் முற்பணம் மற்றும் அதிகாரம் - (XXIV)<br>• நிதிப் பிரமாணத்தின் பின்வரும் அத்தியாயங்கள்<br>அங்கீகாரமளித்தல், சான்றுபடுத்தல், கொடுப்பனவு நட்டம் மற்றும் விட்டுவிடுதல்கள், (நி.பி.101 மற்றும் 200 - 205வரை) |
| பதவிக்கு உரிய விடய அறிவு தொடர்பான வினாத்தாள். | கடமையுடன் தொடர்புடைய விடயம் தொடர்பான தொழில்புரிதலின் பொருட்டு அடிக்கடி பயன்படுத்தப்படும் உபகரணங்களின் பெயர்கள் மற்றும் அவை வைத்திருக்கப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள், பதவியின் பொருட்டு ஒதுக்கப்படுகின்ற வெவ்வேறு செயற்பாடுகள் தொடர்பான போதுமான அறிவு மற்றும் ஆற்றல் போன்றவற்றை கொண்டுள்ளாரா என்பதை பரீட்சித்தல். |

09. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10 இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 02 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்தில்) தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**குறிப்பு : கவனிக்கவும் : - சிங்களம், தமிழ், ஆங்கில சுற்று நிருபங்களில் ஏதாவது முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக
சுகாதார அமைச்சு,

| EXQ |
|---|

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

# மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 02 – 2006) (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான யிற்குரிய பதவியினருக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (2ஆவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( தமிழில் எழுதவும்) :………………………………………………………
…………………………………………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்):
…………………………………………………………………………………………

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ……………………………………………………………………………………

(ii) தரம் II ,ற்கு பதவியுயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் கடிதத்தின் இலக்கம். : ……………………………………………………………………

(iii) தற்போது பெறும் வருடாந்தச் சம்பளம் : ……………………………………………………

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள பாடத்திற்கு எதிரேயுள்ள கூண்டினுள் (✓) அடையாளமிடவும்.

தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் ☐ விடயம் தொடர்பான அறிவு ☐

03. (அ) (i) தற்போது சேவை புரியும் நிறுவனம் :

(தமிழில்)……………………………………………………………………………

(ஆங்கிலத்தில்) ……………………………………………………………………

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது

மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(iii) மாகாண சபையாயின் உரிய மாகாணம் : ……………………………………………

(ஆ) சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டம் : ……………………………………………………

(இ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது சுய முகவரியிடப்பட்ட 9”x4” அளவுடைய ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறைகள் 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ……………………………………………

(ஈ) (i) தபால் முகவரி (தமிழில்) : ……………………………………………………………

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ……………………………………
…………………………………………………………………………………………

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………

05. (i) இதற்கு முன்னர் இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................

(ii) முதற் தடவை விண்ணப்பிப்பதல்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ..........................................

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............................ ............................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

திரு./திருமதி/செல்வி............................ முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பம் முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளித்தார் என்றும் தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :............................ ............................

பெயர், கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் உறுதியுரை**

திரு/திருமதி/செல்வி............................................ என்பவர் .............................. உத்தியோகத்தராக இந்த நிறுவனத்தில் சேவை புரிவதாகவும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை ஆனபடியால் முத்திரை ஒட்ட தேவையில்லை என்றும் / முதற்தடவை அல்லாத படியால் ரூபா .......... முத்திரை ஒட்டப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ............................ ............................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09. **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ........................................... என்பவர் எனது நிறுவனத்தில் ...................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................ ............................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்(இறப்பர்
முத்திரை இடப்பட வேண்டும்)